SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
December 2023
ISSN: 2456-821X

==========================================================================

# சங்க இலக்கியத்தில் காதல் கூறுகள்

முனைவர் ல.குமாரி கிருஷ்ணவேணி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த் துறை,
ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி,
சுங்கான்கடை,

==========================================================================

ஆய்வுச் சுருக்கம்

பண்பாடு என்பது ஓர் இனத்தின் அல்லது குழுவினரிடத்தில் காலங்காலாமாக, நிலையான மதிப்பைப் பெற்று விளங்குவது. ஓர் இனத்தின் பண்பாடானது அவ்வினத்தின் அடையாளமாகக் கருதப்பட்டு வருகிறது. மக்களிடத்தில் ஒரு சூழலில் தோன்றும் நம்பிக்கையானது காலப்போக்கில் பழக்கமாக மாற்றம் பெற்று வழக்கமாகி அதுவே பண்பாடாக சமூகத்தால் கட்டமைக்கப்படுகிறது. காலப்போக்கில் பண்பாடு ஒரு பரிணாம வளர்ச்சியினைப் போல் உருப்பெறுகிறது. தமிழரின் உயர்ப்பண்பாட்டிற்கு வழிகாட்டியாக அமைவது அறமாகும். உலக வாழ்வு இன்பமும் துன்பமும் நிறைந்தது. பொறுப்பு மிக்கது. தமிழர் நாகரீகமும் பண்பாடும் மிகப் பழமையானவை பழந்தமிழர் உலகியல் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்துள்ளனர், வாழும் பொழுது தனக்கெனச் சில வாழ்வியல் நெறிமுறைகளைக் கையாண்டுள்ளனர். பிறர் நலத்தைப் பேணுவதே சிறந்த பண்பாடு. அதற்காகவே வாழ்தல் வேண்டும். தனக்கென வாழாமல் பிறருக்காக வாழக்கூடிய வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்ற உயர்ந்த பண்பினைக் கொண்டுள்ளனர். தமிழர்கள் தன்னம்பிக்கைக் கொண்டவர்கள். அத்தோடு தன் நண்பர்களிடமும் தன்னைச் சுற்றியிருப்பவர்களிடமும், அளவிட முடியாத நம்பிக்கையையும், அன்பினையும் கொண்டவர்களாகக் காணப்பட்டுள்ளனர்.

திறவுச் சொற்கள்

விருந்தோம்பல், மானம், ஈகை, நட்பு, உதவி.

## முன்னுரை

சங்கங்கள் அமைத்து இலக்கியத்தை வளர்த்த பெருமை தமிழ்மொழிக்கு உண்டு. தமிழ்மொழிக்குச் சொந்தமான தமிழர்கள் பண்பாட்டு நெறியுடன் வாழ்ந்துள்ளனர். பண்பாடு மனித உள்ளத்தோடு தொடர்புடையது. மக்கள் கூடிவாழ்ந்தலே இல்வாழ்க்கை. இல்லறம் செம்மையுற்றால் தான் நாட்டில் நல்வாழ்வு உண்டாகும். ஒரு சமூகத்தின் நாகரீகத்தை வெளிக்காட்டுவதும், உயர்த்துவதும் இல்லறமாகும். பண்பாட்டு நெறிகளாக ஈகை, நம்பிக்கை விருந்தோம்பல், காதல், நட்பு போன்ற பலவற்றைக் கூறலாம். இலக்கியங்களில் குறிப்பாகக் காதல் என்ற பண்பாட்டு நெறி மக்களிடையே கட்டமைக்கப்பட்டுள்ளதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

காதல் என்றால் அன்பு என்பது பொருள். அது ஒரு பரிணாமம். அன்பு என்பது ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் ஒரு முக்கியமான அம்சம். மனித வாழ்க்கைக்கு உயர்நிலை அளிப்பது அன்பு. தன்னைப் பிறர்க்குக் கொடுப்பது அன்பு. பொருள், பெயர், இடம், தொழில், காலம் போன்ற பல கரணங்களில் (செயல்) அமைவது காதல். இவை ஒன்றுக்கு ஒன்று இணைந்துள்ளது. மேலே குறிப்பிட்ட வகையிலான சங்கப் பாடல்களைக் காண்போம்.

இனிமையான மாலை நேரம். தலைவன் வரவை எதிர்நோக்கி இருக்கும் தலைவி. ஆலமரக்கிளையில் பறவைகள் ஓசை எழுப்புகின்றன. அந்நேரக் காட்சியை இருவரும்

*ஒருவருக்கொருவர் நினைவு கொள்கின்றனர். தலைவிக்கு அந்நிகழ்வு அவலமாகவும், தலைவனுக்கு அழகாகவும் தோன்றுகின்றன. அதுபோல தாமரைப் பூவானது கதிரவன் தோன்றும் போது மலரும் மறையும் போது கூம்பும் இந்நிகழ்ச்சியானது தலைவன் தலைவியின் பக்கத்தில் இருக்கும்போது அவளுக்கு மகிழ்வாகவும், அவன் பிரியும் போது வருத்தமாகவும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.*

*"கல்லெனக் கவின் பெற்ற விழவு ஆற்றுப்படுத்த*
*புல்லென்ற களம் போல் புலம்பு கொண்டு அமைவாளோ*
*ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடு போல்,*
*பாழ்பட்ட முகத்தோடு, பைதல் கொண்டு, அமைவாளோ*
*ஓர் இரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்*
*நீர் நீத்த மலர் போல நீ நீப்பின் வாழ்வாளோ"[1] (பாலைக்கலி.5:10-15)*

*இப்பாடலில் உலகியல் உண்மையும் வாழ்வியல் முறையும் மக்களின் பண்பாடாக அமைந்துள்ளதைக் காணலாம்.*

*இன்பத்திலும் துன்பத்திலும் தலைவன் தனக்குத் துணையாக அமைவதையே தனது இன்பமாகக் கருதும் அன்பு மனம் உடையவளாகத் தலைவி விளங்கினாள். செல்வத்தின் பயனே ஈதல் எனும் பண்பாட்டை உடையவர்கள் தமிழர்கள். அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்றார் வள்ளுவர் பெருமான். அறவாழ்க்கையில் தான் காதலும் அடங்கியுள்ளன. காதல் உலகத்தில் இருவர் என்ற நிலை இல்லை. நீரொடுநீர் கலந்தார்போல, ஈருடலும் ஓர் உயிருமாய் எங்கேயோ பிறந்த ஆணும் பெண்ணும் மனம் ஒன்றி உண்மை காதல் செய்கின்றனர். இக்காதல் ஆழமும், அகலமும், உயர்ச்சியும் உடையது. எந்த நிலையிலும் அழியாது நிற்பது. பிறவிதோறும் தொடர்ந்து வருவது என்பது மக்களின் நம்பிக்கை. இந்தப் பிறவி காதலே அடுத்த பிறவியிலும் தொடர வேண்டும் எனப் பெண் ஒருத்தி வேண்டுவதை,*

*"இம்மை மாறி மறுமை யாயினும்*
*நீயா கியரென் கணவனை*
*யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே" (குறுந்.49)*

*எனும் பாடலால் அறியலாம்.*

*அகப்பாடலை நோக்கின் தலைவி தலைவன்பால் அதீத நம்பிக்கை வைத்திருப்பதைக் காணலாம். தனது தலைவன் தனக்கு மிகவும் இன்றியமையாதவர், நிலைமை தவறாத வாய்மையுடையவர், என்னை விட்டுப் பிரிந்து செல்வதை ஒருபோதும் நினையாதவர். தாமரையின் குளிர்ச்சியான தாதினையும், மேலோங்கிய சந்தனத்தின் தாதினையும் ஊதி அந்தச் சந்தன மரத்தில் வைத்த இனிய தேன் போலத் திண்ணமாகச் சிறந்தவன். இதை,*

*"நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்*
*என்றும் என் தோள் பிரிபு அறியலரே*
*தாமரைத் தண் தாது ஊதி, மீமிசைச்*
*சாந்தில் தொடுத்த தீம் தேன் போல" (நற்.1)*

*என்ற பாடலில் தலைவியின் நம்பிக்கையை அறியமுடிகிறது. மேலும் ஈகை என்பது தமிழர் பண்பாடுகளில் ஒன்று. தலைவன் ஈதல் பொருட்டு அச்சத்தைப் பெரிதாகக் கருதாமல் கடுமையான பாலை நிலத்தின் வழியே பொருள் தேடச் செல்கிறான்.*

*"பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமொடு*
*காமர் பொருட்பிணிப் போகிய" (நற்.186)*

*என்ற பாடலில் தலைவனின் அருள் உள்ளதைக் காணலாம்.*

*தலைவன் தலைவிக்கும் தலைவி தலைவனுக்குமே உரிமை ஒருத்தரை ஒருத்தர் பிரியாமல் ஒற்றுமையாகக் காணப்படுவர். இதை கலித்தொகையில் ஒரு பெண் தன் காதலுடன் உடன்போக்கு போக, அவளைத் தேடிச் சென்ற செவிலித் தாயிடம் ஆறுதலாகக் கூறுகிறார் ஒருவர். அதாவது சந்தனம் மலையில் பிறந்தாலும் மலைக்கு அது சொந்தம் இல்லை. அதனைப் பயன்படுத்துபவருக்கே சொந்தம். அதுபோல முத்துச் சிப்பியில் பிறந்தாலும் அது சிப்பிக்குச் சொந்தம் இல்லை. ஆதனை அணிந்து கொள்பவருக்கே சொந்தம். யாழிலே இசை பிறந்தாலும் அந்த இசை யாழுக்குச் சொந்தம் இல்லை அந்த யாழை மீட்டுபவருக்கே சொந்தம். இங்கே அதுபோலத் தான் உன்னுடைய மகளும், அவளது தலைவனுடன் சென்று விட்டாள். அதனால்*

அவள் அவனுக்கே இனி சொந்தம் எனக் கூறிவதிலிருந்து அன்றைய தமிழர்களிடம் மனையறம் என்ற பண்பாட்டை அறிந்து கொள்ளலாம்.

இயற்கையைத் தெய்வமாக வழிபடும் பண்பாடு தமிழரிடையே தொன்றுதொட்டு இன்று வரை காணப்படுகிறது. பிறையைத் தொழுதல் தமிழர் மரபு. அதிலும் மூன்றாம் பிறையைத் தேடிப் பார்த்து தொழுவது என்பது வழக்கம். இதைக் குறுந்தொகைப் பாடலில் காணலாம்.

"தொழுது காண் பிறையின் தோன்றி" (குறுந்.178)

"இன்னம் பிறந்தன்று பிறையே" (குறுந்.307)

தமிழ் சமுதாயத்தில் நடுகல் நடும் வழக்கம் காணப்பட்டுள்ளது. போரில் மாண்ட வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபட்டதோடு நடுகற்களுக்கு மாலை சூட்டி பீலி சூட்டும் பழக்கத்தினையும் கொண்டுள்ளனர். அதியமான் இறந்தவுடன் அவனுக்கு நடுகல் நட்ட செய்தியை,

"இல்லாகியரோ காலை மாலை
அல்லாகியர் யான் வாழுறானே
நடுகற் பீலி சூட்டி நார் அரி
சிறுகாலத்து உருப்பவும் கொள்வான் கொல்லோ" (புறம்.232)

எனும் பாடலால் அறியலாம்.

விருந்தோம்பல் என்பது பண்டைய தமிழர்களின் தலையாய பண்பாடாகும். வீட்டில் வரும் விருந்தினர்களை முகம் மலர உபசரித்து அன்புடன் பேசி இனிய உணவினை அளிப்பது என்பது சாதாரணச் செயல் இல்லை. விவேக சிந்தாமணி எனும் நூலில்,

"ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்து உண்மைபேசி
உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்
முப்பழ மொடுபால் அன்னமும் முகங்கடுத்திடு வாராயின்
கப்பிய பசியினொடு கடும்பசி யாருந்தானே"

எனக் கூறப்படுவதைக் காணலாம். அதாவது வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று அன்புடன் பேசி உப்பில்லாத கூழினைக் கொடுத்தாலும் அதுவே அவர்களுக்கு அமிர்தமாகும். ஆனால் முகவெறுப்புடன் முக்கனிகளோடு கூடிய பாலமுதத்தைக் கொடுத்தால் அதுவே அவர்களின் பசியை மேலும் மிகுந்துவிடும் என்பதாகும்.

அகப்பொருள் இலக்கியத்தை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு நிலத்திற்கேற்ப விருந்தோம்பல் உணவின் தன்மை மாறுபடும். வேட்டுவர்கள் மலையில் இருந்து கொண்டுவந்த தேன், தினை, கனி, ஊன்கறி தவிர மூங்கில் குழாயினுள் ஊற்றி நீண்டநாள் புளிக்க வைத்த கள்ளையும், அருவிநீர் அடித்துக் கொண்டு வந்த பலா கொட்டைகளை மாவாக்கி புளியம் பழத்துடன் மோர் சேர்த்து மூங்கிலரிசியுடன் கடமான் கறியையும் உடும்பின் இறைச்சியையும் உண்ணக் கொடுத்துள்ளனர். இதை,

"ஏறித் தரூஉம் இலங்குமலைத் தாரமொட
வேய்ப் பெயல் வினையுள் தேக்கட் தேறல்
குறைவின்று பருகி நறவு மகிழ்ந்து வைகறைப்
பழஞ் செருக்குற்றதும் அனந்தல் தீர
அருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை" (மலைபடு.170-175)

எனும் பாடல் வரிகளால் அறியலாம். இடையர்கள் தங்கள் இல்லம் நோக்கி வரும் விருந்தினர்களுக்கு வேற்றிடம் சென்று மேய்த்து வந்த பசுக்களின் இனிய பாலினைக் கொடுத்து உபசரித்துள்ளனர். இதனை,

"வேறுபுலம் படர்ந்த ஏறுவடை இனத்த
வளையான் தீம்பால் மிளைசூன் கோவலர்
வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின்" (மலைபடு.408-410)

எனும் வரிகளால் அறியலாம். தமிழ் மக்கள் பிறருக்கு உதவி செய்யும் பண்பாட்டைக் கொண்டவர்கள், இளம்பெருவழுதி எனும் புலவர் கூறும்போது தன்னலம் இல்லாமல் பிறர் நன்மையை நாடி உழைக்கும் சான்றோர் இருப்பதால் இந்த உலகம் நிலைத்திருக்கிறது என்கிறார். இதை,

*“அன்னமாட்சி அனையராகித்*
*தமக்கென முயலா நோன்தான்*
*பிறர்க்கென முயலுநர் உண்மையானே”* *(புறம்.182)*

எனும் வரிகளால் அறியலாம். அன்பு இல்லாமல் கொடுக்கும் பொருளை புலவர்களும் ஏற்றதில்லை என்பதை,

*“முற்றிய திருவின் மூவராயினும்,*
*பெட்டியின் றீதல் யாம் வேண்டலமே”* *(புறம்.205)*

என்று பெருந்தலைச் சாத்தனார் கடிய நெடுவேட்டுவனிடம் நிறைந்த செல்வத்தை உடைய முடியுடைய மூவேந்தர்களாக இருந்தாலும் அன்பின்றி தரும் பரிசிலை யாம் விரும்பவில்லை என்கிறார். அதுபோல தன்மானத்திற்கு இழுக்கு ஏற்படும் வகையில் கிடைக்கும் பொருளையும் வாங்கமாட்டார்கள். இதைப் பெருஞ்சித்திரனார் அதிகமான் நெடுமானஞ்சியிடம் பரிசில் பெறச் சென்றபோது அவன் அவரைப் பார்க்காமலேயே பரிசினைக் கொடுக்க, புலவர் அப்பரிசினை வாங்காது, தான் ஒரு வணிகப் பரிசிலன் அல்லன் என்றும், ‘மன்னன் கொடுப்பது தினை அளவாக இருந்தாலும் அதைத் தன் தகுதியறிந்து கொடுத்தால் பெறுவேன் எனத் தன்மானத்துக்கு இழுக்கு வரக்கூடாது’ என்று எண்ணுவது புலப்படுகிறது.

*“. . . . . . . . . . . . . . என்னை*
*யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்*
*காணா தீத்த இப்பொருட் கியானோர்*
*வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்*
*தினையனைத் தாயின் இனிதவர்*
*துணையன வறிந்து நல்கினர் விடினே”* *(புறம்.208)*

என்பதால் அறியலாம்.

புலவர்கள் அரசர்களும், வள்ளல்களும் நல்கும் பொருள்களைத் தாமே அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுத்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாட்டைக் கொண்டவர்கள். பெருஞ்சித்திரனார் எனும் புலவர் தன் மனையாளிடம் தான் கொண்டு வந்த குமணன் கொடுத்த பரிசில் பொருள்களைக் கொடுத்துவிட்டு,

*“நின்நயந்து உறைநர்க்கும், நீநயந்து உறைநர்க்கும்*
*பல்மான் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்*
*கடுபின் பசிதீர யார் நின்*
*நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்*
*இன்னோர்க்கும் என்னாது என்னோடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே”* *(புறம்.163)*

என்று கூறுவதால் அறியலாம். இப்பாடலில் புலவர்கள் வறுமையில் வாடினாலும் கிடைத்தப் பொருளைத் தனக்காகப் பாராமல் எல்லோர்க்கும் இத்துவக்கம் பண்பினைக் காணலாம். இதைவிட உயர்ந்ததொரு பண்பாட்டை எங்கே பார்க்க முடியும்.

உலகில் மனிதன் நடுநிலை மனத்துடன் வாழ்வதே சிறந்த பண்பாகும். தமிழர் பண்பாடாகக் கணியன் - பூங்குன்றனார் விளக்குகிறார்.

*“யாதும் ஊரே,யாவரும் கேளிர்;*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன*
*சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்*
*இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்*
*இன்னா தென்றலும் இலமே”* *(புறம்.192)*

அதுபோல பிறருக்கு நன்மை செய்வதும், உதவுவதும் எல்லோராலும் செய்யத் தரும் செயல் இல்லை. என்றாலும் உதவுபவரைத் தடுக்காமலும், தீமை செய்யாமலும் இருந்தால் அதுவே போதும் என்கிறார் நரிவெரூஉத்தலையார்.

*“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின்”* *(புறம்.195)*

*பண்டைய புலவர்கள் மக்களை நல்வழிப்படுத்தி நடுநிலைமையுடன் வாழ வழி கூறுவதைக் காணலாம். இதுவும் தமிழர் பண்பாடாகும்.*

*நட்பு என்பது ஒருவருக்கொருவர் அறிந்து கொண்டு பழகி அன்புடனும், பாசத்துடனும் வாழ்வதாகும். அதனடிப்படையில் பார்க்கும் போது கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையரும் ஒருவருக்கொருவர் உணர்ச்சியால் உள்ளம் கலந்த அன்பு நண்பர்கள். பிசிராந்தையர் தங்களைப் பார்க்க வரமாட்டார் எனக் கூறிய சான்றோர்க்கு, அவன் என்னை என்றும் இகழாத குணத்தினன், நெருங்கிய நட்பை உடையவன் பொய்மையை விரும்பாதவன். தன் பெயரைப் பிறர்க்குச் சொல்லும் போது பேதமை உடைய சோழன் என்று என் பெயரைத் தன் பெயராகச் சொல்லும் அன்புக்குரியவன். இப்போதே வருவான் என்றான். இதை,*

*“இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்*
*புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே*
*புன்பெயர் கிளக்கும் காலை என் பெயர்*
*பேதைச் சோழன் என்னும் சிறந்த*
*காதற் கிழமையும் உடையவன் அதன் தலை*
*இன்னதோர் காலை நில்லலன்*
*இன்னே வருகுவன்” (புறம்.216)*

*எனும் வரிகளால் அறியலாம். மனித உயிர் இயங்குவது அன்பால் தானே. அன்பானது நட்பையும் ஒற்றுமையையும் வளர்க்கும். அன்பு தழைத்தால் வன்முறை அழியும்; அமைதி குடிகொள்ளும்.*

*தமிழர்கள் தன்மானம் மிக்கவர். மானமே சிறந்தது என்று வாழ்பவர். மக்கள் தங்கள் பால் கொண்டுள்ள காதலால் மானத்துடன் வாழ்ந்துள்ளனர்.*

*“கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்*
*மதுகை இன்றி வயிற்றுத் தீத் தணியத்*
*தாம் இரந்து உண்ணும் அளவை*
*ஈன்ம ரோஇவ் வுலகத் தானே” (புறம்.74)*

*சோழ மன்னன் செங்காணன் தன்னிடம் தோற்ற கணைக்கால் இரும்பொறையைச் சிறையில் அடைத்தான். தாகத்தால் சிறைக்காவலனிடம் இரும்பொறை குடிநீர் கேட்ட போது காவலன் காலம் தாழ்த்தி கொண்டு வந்து கொடுத்த காரணத்தால், குடிநீரை அருந்தாமல் தனக்கு இழுக்கு ஏற்பட்டதாக நினைத்து உயிர் நீத்தான். இதிலிருந்து மயிர் நீப்பின் உயிர்வாழா கவரிமான் போல மானம் இழந்து உயிர் வாழாத மன்னனின் மாண்பு தெரியவருகிறது.*

*பழந்தமிழர் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கினர். விருந்து செய்வதற்காக மக்கள் தங்கள் இல்லத்தின் முன்புறத்தில் திண்ணையை அமைந்திருந்தனர். இரவு நேரங்களில் வந்து தங்குவோர்க்கு உணவு கொடுத்துள்ளனர். இரவு கதவடைக்கும் முன்பாக விருந்தினர் யாரேனும் திண்ணையில் உள்ளனரா எனப் பார்த்த பின்னரே கதவடைத்துள்ளனர்.*

*“பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்*
*வருவீர் உளீரோ” (குறுந்.18)*

*விருந்தினர் ஒருநாள் மட்டுமல்ல பலநாள் பலபேருடன் சென்றாலும் முதல் நாளைப் போலவே இன்முகம் காட்டி வரவேற்று விருந்தளித்துள்ளனர். அதுபோல முகக்குறிப்பறிந்து வேண்டியவற்றை வழங்கும் பண்பை உடையவர்களாகக் காணப்பட்டனர் தமிழர்கள். தன்னை நாடி வந்த புலவரை நல்லியக்கோடன் முதலில் மாசுபடிந்த ஆடையை நீக்கி தூய ஆடையை அணிவித்து, களைப்பு தீர உணவளித்து பின்பு வேலைப்பாடுடைய தேர், குதிரை போன்ற பொருள்களையும் கொடுத்துத் தேர்ப்பாகனையும் அனுப்பி வைக்கிறான்.*

*“நீ சில மொழியா அளவை மாசில்,*
*காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ*
*பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி*
*. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .*
*விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி*
*ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி*
*. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .*
*கருந் தொழில் வினைஞர் கைவினை முற்றி*
*ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு” (சிறுபாண்.235-258)*

இப்பாடலில் வருபவரின் முகக்குறிப்பை அறிந்து வேண்டியன வழங்கும் உயர்ந்த பண்பாட்டை தெரிந்து கொள்ளலாம்.

புலவர்களும் ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்யும் பண்பைக் கொண்டவர்கள். இதை,

"பாடல் பற்றிய பயனுடை எழாஅல்
கோடியர் தலைவ கொண்டது அறிந
அறியாமையின் நெறிதிரிந்து ஒராஅது
ஆற்றுஎதிர்ப் படுதலும் நோற்றதன் பயனே" (பொரு.56-59)

என்ற பாடல் வரிகளில் பரிசில் பெற்று வந்த பொருநன் எதிர்ப்பட்ட மற்றொரு பொருநனின் வறுமைப் பிணி தீர்க்க வழிகாட்டும் பண்பாட்டை அறிந்து கொள்ளலாம். நான் உனக்கு இந்த உதவியைச் செய்தால் நீ எனக்குக் கைமாறாக இதைச் செய்ய வேண்டும் என்று எதிர்ப்பார்த்து உதவி செய்வார்கள் இன்றைய மக்கள். ஆனால் பழந்தமிழர்கள் அவ்வாறில்லாமல் வீடு தேடிவரும் இரவலர் பசியோடு திரும்பிச் செல்லக் கூடாது என்பதற்காக விதைக்காக வைக்கப்பட்டுள்ள தினையை உணவாக்கிக் கொடுத்துள்ளனர் என்ற செய்தியை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

தன் மீது அன்பு கொண்டு வாழ்வது போல் பிறர் மீதும் அன்பு கொண்டு வாழ்ந்தவர் தமிழர். அதுமட்டுமின்றி உயர்திணை அல்லாத ஏனைய உயிர்களிடமும் அன்பு கொண்டிருந்தனர். ஓரறிவுடைய முல்லைக் கொடி படர்வதற்கு தனது தேரையே ஈன்றவன் பாரி. ஐந்தறிவுடைய மயிலுக்குப் போர்வையை அளித்தவன் பேகன். ஒரு புறாவின் உயிரைக் காக்க வேண்டி அதன் எடைக்கு ஈடாகத் தன்னையே விலாத்தட்டில் ஏறிமுறை செய்தவன் சி.பி. சக்ரவர்த்தி. இதையெல்லாம் பார்க்கும் போது தன்னுயிர் போல மன்னுயிர் காக்கும் பண்புடையவர்களாகத் தமிழர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறியலாம்.

முடிவுரை

அன்பின் வெளிப்பாடே மனிதநேயமாகும். வாழ்வியலின் அடிப்படை அன்பே. மனிதவாழ்வு வளமாக அமைய வாழ்வியல் நெறிமுறைகள் இன்றியமையாததாகும். பழந்தமிழர் வாழ்வு போற்றத்தக்கதாய் இருந்தது. அவர்கள் பண்பாடு மிக்கவர்களாகவும் நற்குணங்களைக் கொண்டவர்களாகவும் விளங்கினர். மனிதனின் உயிர் பண்பாக அமைவதே பண்பாடாகும். பண்பாடு என்பது பண்பட்ட நிலையைக் குறிக்கும், மானம் இழந்தால் உயிர் வாழ்வது எந்த விதத்திலும் பயனில்லை என்று மன்னன் மாண்ட பண்பு தெரியவருகிறது. வறுமையில் இருக்கின்ற வறியவர்களுக்கக் கொடுத்துண்ணும் பழக்கம் புலவர்களிடம் காணப்பட்டுள்ளது. பிறருக்கு நல்லது செய்யவில்லை என்றாலும் தீமை செய்யாமல் இருத்தல் வேண்டும் என்ற தமிழர் பண்பும் வெளிப்படுகிறது. தமிழர்கள் விருந்தோம்பல் பண்பிலும் சிறந்து விளங்கியுள்ளனர். இவையெல்லாம் தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாகும்.

துணைநூற்பட்டியல்

1. கலித்தொகை, புலியூர்க் கேசிகன், கௌரா பதிப்பகம்/ சாரதா பதிப்பகம், 2003.
2. குறுந்தொகை, புலியூர்க் கேசிகன், கௌரா பதிப்பகம்/ சாரதா பதிப்பகம், 1996.
3. நற்றிணை, புலியூர்க் கேசிகன், கௌரா பதிப்பகம்/ சாரதா பதிப்பகம், 2021.
4. பத்துப்பாட்டு, பெ.வே. சோமசுந்தரனார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
5. புறநானூறு, கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1968.

********* ********* ********** ********* ********* ********** ********** **********